## நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இரணியல்

### முன்னிலை திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L., LLM.,D.JJJ.Psy.,

நீதித்துறை நடுவர், இரணியல்

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் நாள் திங்கள்கிழமை**

**சுருக்கு விசாரணை வழக்கு எண். (S.T.C.) 945/2022**

## CASE SUMMARY

<table>
<tr><th>Sl.No</th><th>Description</th><th colspan="3">Remarks</th></tr>
<tr><td>1</td><td>The period of remand of the accused</td><td colspan="3">Not Remanded</td></tr>
<tr><td>2</td><td>The date of filing of complaint/final report in the Court</td><td colspan="3">08.10.2022</td></tr>
<tr><td>3</td><td>The date of committal of the case to the Court of Sessions</td><td colspan="3">N.A</td></tr>
<tr><td>4</td><td>The date of Questioning of accused u/s 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be</td><td colspan="3">18.02.2026</td></tr>
<tr><td>5</td><td>filing of all miscellaneous petitions and their result including the results on challenge before Superior Court. Except routine petitions like petition under section 317 of the Code .</td><td colspan="3">U/s. 359 BNSS petition allowed on 01.04.2026<br>U/s.359 BNSS Petition allowed in respect of compoundable offence alone on 11.03.2026</td></tr>
<tr><td rowspan="4">6</td><td rowspan="4">Date of examination in Chief and Cross examination of a witness</td><td>Witness</td><td>Chief Examination</td><td>Cross Examination</td></tr>
<tr><td>P.W.1</td><td>11.03.2026</td><td>--</td></tr>
<tr><td>P.W.2</td><td>11.03.2026</td><td>--</td></tr>
<tr><td>P.W.3</td><td>01.04.2026</td><td>01.04.2026</td></tr>
<tr><td>7</td><td>Date of examination of the accused under section 351of the Court</td><td colspan="3">06.04.2026</td></tr>
<tr><td>8</td><td>Details of Abscondence of an accused and his appearance /production, as the case may be</td><td colspan="3">N.A.</td></tr>
<tr><td>9</td><td>Grant of stay by superior Courts and the results thereof</td><td colspan="3">N.A</td></tr>
</table>



SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.06 18:31:58 +0530

| | |
|---|---|
| அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>குளச்சல் காவல் நிலையம்,<br>குற்ற எண் 184/2022 | .............குற்றமுறையீட்டாளர், |

/எதிர்/

| | |
|---|---|
| பால்தாசன் (வயது 50/2022)<br>த/பெ. தனிஸ்லாஸ்<br>இனிகோ நகர், குறும்பனை | ................. குற்றம் சுமத்தப்பட்ட நபர் |

இவ்வழக்கு **05.11.2022** அன்று நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இது நாள் வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இவ்வழக்கு **06.04.2026** இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வரப்பெற்று அரசு தரப்பில் **அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1** அவர்களும், குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.**S.பிரிட்டோசிங்** அவர்கள் ஆஜராகியும், வாதத்தை கேட்டும் ஆவணங்களை ஆராய்ந்தும் இன்று **06.04.2026** நீதிமன்றம் கு.வி.மு.ச 1973அத்தியாயம் XXVII –ன் பிறப்பிக்கும்.....

**<u>தீர்ப்புரை</u>**

இத்தீர்ப்புரையில் இந்திய தண்டனைச்சட்டம் 1860 என்பது இ.த.ச 1860 என்றும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் 1973 என்பது கு.வி.மு.ச 1973 என்றும், பாரதிய சாக்சிய அதிநயம் 2023 என்பது பா.சா.அ 2023 என்றும், பாரதிய நாகரிக் சுரக்ச சங்கீதா 2023 என்பது, பா.நா.சு.ச.2023 என்றும் பதிவிடப்படுகின்றது.

**1. <u>அரசுத்தரப்பு வழக்குரையின் சுருக்கம் :-</u>**

கடந்த 11.07.2022 ஆம் தேதி 18.00 மணிக்கு புகார்தாரர் சேகர் TN 75 AC 9656 என்ற பதிவு எண் கொண்ட மோட்டார் சைக்கிளில் பின்னால் உட்கார்ந்தும் விஜயகுமார் என்பவர் வாகனத்தை ஓட்ட திங்கள்நகர் to குளச்சல் ரோட்டில் குளச்சல் நோக்கி ஓரமாக சென்று கொண்டிருந்த போது அவர்களுக்கு பின்னார் குற்றம் சுமத்தப்பட்ட நபர் TN 75 N 1881 என்ற அரசு பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விஜயகுமார் ஓட்டி வந்த மோட்டார் பைக்கின் பின்னால் மோதி புகார்தாரருக்கு வலது கண், வலது கை, வலது கை மூட்டு, வலது கால் ஆகிய இடங்களில் கொடுங்காயங்களும், விஜயகுமாருக்கு தலையில், வலது தோள்பட்டை, இடது பக்க விலாவில் கொடுங்காயங்களும் ஏற்படுத்திய ஒரு தகவல் **கு.வி.மு.ச 1973 பிரிவு 154(1)ன்** கீழ் ஒரு முதல் தகவல் அறிக்கை பெறப்பட்டு அதன் அடிப்படையில் புலன் விசாரணை செய்து குற்றம் சுமத்தப்பட்ட நபரின் செய்கையானது **இ.த.ச** 1860 பிரிவுகள்



SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.06 18:32:06 +0530

**279, 337 மற்றும் 338 ன்** கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று **குவிமுச 1973 பிரிவு 173(2)–** ன்படி குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. குவி.மு.ச 1973 பிரிவு 207ன் கீழ் இலவசமாக நகல் வழங்குதல் –**

இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குற்றமுறையீட்டு காவல் நிலையத்தார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச 1973 பிரிவு **207**ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3. கு.வி.மு.ச 1973பிரிவு 251ன் கீழ் குற்றச்சாட்டு வனைதல் :-**

வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதின் அடிப்படையில் இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது குற்றம் புரியப்பட்டிருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு ஆதாரம் இருந்ததால் **கு.வி.மு.ச 1973பிரிவு 251ன் கீழ்** குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது **இ.த.ச 1860 பிரிவுகள் 279 மற்றும் 338(2எண்ணிக்கைகள்) ன் கீழ்** குற்றம் குறித்து வினவப்பட்டதில் இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் குற்றவாளி இல்லை எனக்கூறி குற்றத்தை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டினார். எனவே அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு **கு.வி.மு.ச 1973 பிரிவு 254** ன் கீழ் உத்தரவிடப்பட்டது.

அரசுத்தரப்பு சாட்சிய விசாரணை துவங்கும்போது குற்றம் சுமத்தப்பட்ட நபர்களும் இந்த வழக்கில் நிகழ்நிலை புகார்தாரரும் இணைந்து **சமரசமாகி** இந்த வழக்கினை கு.வி.மு.ச 1973 **பிரிவு 359(8)ன்** படியும் தாங்கள் ராசியாகி விட்டதாகவும், அதனால் மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் மனு தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி மனுவினை இந்நீதிமன்றம் பரிசீலித்ததில் இந்த குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டுகளில் இ.த.ச 1860 பிரிவு **279ன்** பா.நா.சு.ச 2023 பிரிவு **359(1)** அல்லது பிரிவு **359(2)** ன் கீழ் வரவில்லை என்பதால் இந்நீதிமன்றம் மேற்படி மனுவினை இ.த.ச.1860 பிரிவு **338ஐ** பொறுத்து ஏற்றுக்கொண்டும், ஏனைய பிரிவைபொறுத்து தள்ளுபடி செய்தது.

**4. பா.நா.சு.ச 2023 பிரிவு 277ன் கீழ் அரசுத்தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்:–**

அரசுத்தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9** வரையிலுள்ள சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.06 18:32:11 +0530

**5. பா.நா.சு.ச 2023 பிரிவு 351 (1)(b)ன் கீழ் வினவுதல்**

அரசுத்தரப்பில் சாட்சியம் அளித்துள்ள சாட்சிகளின் சாட்சியத்தினை தொகுத்து குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகள் குறித்து குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் **பா.நா.சு.ச 2023 பிரிவு 351 (1)(b)**ன் கீழ் வினவ குற்றம் சுமத்தப்பட்ட நபர் தன் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தான் நிரபராதி என்றும், தன் மீது எந்த கவனக்குறைவும் இல்லை என்று கூறினார்.

**6. பா.நா.சு.ச 2023 பிரிவு 277ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்**

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனது தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் இல்லை என்று கூறியதால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயங்கள்**

1) இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது **இ.த.ச 1860 பிரிவு 279ன் கீழான** குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

2) நிரூபிக்கப்பட்டிருப்பின் குற்றவாளிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை யாவை?

**பிரச்சனைக்கான தீர்வுகள்**

**சாட்சியங்களில்.......**

புகார்தாரரான **அ.சா.1 சேகர்** தனது சாட்சியத்தில் விபத்து பற்றியும், தனக்கு ஏற்பட்ட காயம் பற்றியும், புகார்மனு பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட நபரான **அ.சா.2 விஜயகுமார்** தனது சாட்சியத்தில் விபத்து பற்றியும், தனக்கு ஏற்பட்ட காயம் பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.

**புலனாய்வு :—**

**அ.சா.3 திரு. ராஜ்மோகன்** கூடுதல் சாட்சி, ஆவணங்களின் அடிப்படையில், புலனாய்வு அதிகாரிக்கு பதிலாக சாட்சியமளித்ததில் இருந்து மேற்படி புலனாய்வு அதிகாரி வழக்கை கோப்புக்கு எடுத்துக்கொண்டு புலனாய்வு செய்து இறுதி அறிக்கையை காலதாமதமில்லாமல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும் நீதிமன்ற புலனாய்வை பொறுத்தவரை புலனாய்வு அதிகாரி விசாரணையை சரியான



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.06 18:32:17 +0530

கோணத்தில் விசாரணை செய்தாரா? என்பதை பார்க்கும்போது **அ.சா.1ன்** சாட்சியத்திலிருந்து முறையாக ஒரு புகார்மனு பெறப்பட்டு அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அதனை தொடர்ந்து முறையாக விசாரணை செய்து அதன் அடிப்படையில் **மாதிரி வரைபடம், பார்வை மகசர், மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள்** பெற்று இந்நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதை வைத்து இந்நீதிமன்றம் மேற்படி புலன் விசாரணை அதிகாரி இந்த வழக்கினை சரியான கோணத்தில்தான் செய்துள்ளார் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**இந்த வழக்கில் எடுத்தியம்பப்பட்ட சாட்சிய சான்றாவணங்களின் மீதான ஆய்வு**

ஒரு வழக்கின் துவக்கப்புள்ளி என்பது ஒரு சம்பவத்தினால் ஒரு நபர் பாதிப்படைந்து அந்த பாதிப்பின் வெளிப்பாடாக ஒரு புகார் தகவலாக பெறப்பட்டு அந்த தகவலானது வாக்குமூலமாக பெறப்பட்டு அதனை தொடர்ந்து மேற்படி சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள், சந்தர்ப்ப சூழ்நிலைகள் மற்றும் இதர சங்கதிகளை கொண்டே எழுகிறது.

ஒரு விபத்து வழக்கை பொறுத்தவரை அவ்வழக்கின் தன்மையை சம்பவத்தில் காயமடைந்த , சம்பவத்தில் உடன் இருந்த, சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சிகளின் மூலமாக மட்டுமே நிரூபிக்க இயலும். மேலும், சில சூழ்நிலைகளில் ***செயலே செப்பும், பொருளே புகழும்( Res Ipsa Laquitor ) என்ற சட்ட முதுமொழியும்*** வழக்கினை தீர்மானம் செய்ய உதவி செய்யும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**இந்த வழக்கை பொறுத்தவரை சட்டப்பிரிவான :-**

**இதச 1860 பிரிவு 279- ஐ பொறுத்து :-**

குற்றம் சுமத்தப்பட்ட நபர் பொது வெளியில் கட்டுக்கடங்கா கடும் வேகமாக வாகனத்தை இயக்கினாரா?

என்ற கூற்றினை ஆய்வு செய்தால் மட்டுமே இந்த வழக்கிற்கான பொருண்மைக்கு தீர்வு காண இயலும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**ஆய்வும் அதற்கான காரணமும் :-**

***மேற்சொன்ன வினாவிற்கான ஆய்வும் அதற்கான காரணமும் :-***

இவ்வழக்கில் அரசுத்தரப்பு முதலில் புகார் அளித்தவரின் புகாரினை மெய்ப்பிக்க வேண்டும் பின்னர் அது தொடர்பான ஆவணங்களான **முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், மாதிரி வரைபடம், மோட்டார் வாகன ஆய்வறிக்கை,** ஆகியவற்றை



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.06 18:32:23 +0530

இந்நீதிமன்றத்தின் முன் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யவேண்டும் என்பது சட்டத்தின் நிலைப்பாடாகும்.

அரசுத்தரப்பில் இந்த வழக்கினை அதன் சங்கதிகளை பொறுத்து குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபரான **அ.சா.1சேகர் மற்றும் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.2 விஜயகுமார்** ஆகியோர்களை முன்னிறுத்தி தீர்மானிக்க வேண்டிய சூழ்நிலையில் இவ்வழக்கின் சாட்சியங்களை பின்வருமாறு இந்நீதிமன்றம் ஆய்வு செய்கிறது.

அரசுத்தரப்பில், இந்த வழக்கில் நிகழ்நிலை புகார்தாரரான **அ.சா.1 சேகர்** இந்த வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபரை பொறுத்து தனது சாட்சியத்தில் 2022 ஆம் வருடம் தனக்கு விபத்தில் காயம் ஏற்பட்டது என்றும், வழக்கு சம்பவம் பற்றி வேறு எதுவும் தெரியாது என்றும், சந்தேகத்தின் அடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது புகார்மனு கொடுத்துவிட்டேன் என்றும், பாதிக்கப்பட்ட நபரான **அ.சா.2 விஜயகுமார்** தனது சாட்சியத்தில் 2022 ஆம் வருடம் தனக்கு விபத்து நடந்தது என்றும், வழக்கு சம்பவம் பற்றி வேறு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்திருப்பதை பொறுத்து அரசுத்தரப்பில் அதன் சங்கதிகளை பொறுத்து இந்த குற்றம் சுமத்தப்பட்ட நபர் **பொது வெளியில் கட்டுக்கடங்கா கடும் வேகமாக வாகனத்தை இயக்கினார்** என்று எந்த சாட்சியமும் முன்னிறுத்தவில்லை என்று இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது .

அரசுத்தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சியங்களில் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்பட்ட புகார்மனு அதனை தொடர்ந்து குறியீடு செய்யப்பட்ட **அ.சா.ஆ.3** ஆன முதல் தகவல் அறிக்கையும் வழக்கில் முன்னிறுத்தப்பட்ட சாட்சியங்களை பொறுத்து ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணங்கள் இல்லை என்றும், மேற்படி ஆவணங்கள் **நிரூபிக்கப்படவில்லை** என்றும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

அரசுத்தரப்பில் **அ.சா.3** மட்டுமே அரசுத்தரப்பு சங்கதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வழக்கின் ஒரு புலன் விசாரணை அதிகாரி சாட்சியமானது சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்ட குற்றம் நடந்த இடத்தை குறிப்பிட்டுக்காட்டக்கூடிய மாதிரி வரைபடம், பார்வை மகசர் **அ.சா.ஆ.4, அ.சா.ஆ.5,** ஆகியவற்றை பொறுத்து நேரடி சாட்சியம் என்றாலும் மற்ற சங்கதிகளை பொறுத்து அவர் கேள்விநிலை சாட்சியாவார். மேற்படி கேள்விநிலை சாட்சியம் என்பது **பா.சா.அ2023 பிரிவு 55ன் கீழ்** ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதையும் கருத்தில்



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.06 18:32:28 +0530

கொண்டு **அ.சா.3 ஆன காவல் அதிகாரியின்** சாட்சியத்தை மட்டும் வைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக இந்த வழக்கினை தீர்வு காண இயலாது, என்பதையும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**பா.சா.அ 2023 பிரிவு 139**ன்படி ஒரு வழக்கினை தீர்மானிப்பதற்கு சாட்சிகளின் எண்ணிக்கை முக்கியமல்ல என்றும் சாட்சியின் நம்பகத்தன்மை மட்டுமே முக்கியம் என்றும் தெளிவாக கூறப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. அதனடிப்படையில் இந்த வழக்கின் பாதிக்கப்பட்ட நபர்களான **அ.சா.1 சேகர் மற்றும் அ.சா.2 விஜயகுமார்** ஆகியோர்கள் அரசுத்தரப்புக்கு ஆதரவாக சாட்சியமளிக்காத நிலையில் மற்ற சாட்சியங்கள் எவ்வகையிலும் அரசுத்தரப்பை உறுதிப்படுத்தவில்லை என்பது இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**இந்நீதிமன்றம் கருத்தில் கொண்ட சாட்சியங்களின் சாராம்சத்தின் தீர்வு :**

மேலும் அரசுத்தரப்பில் கூறியுள்ளது போல் மேற்படி சம்பவத்தை இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் செய்தார் என்பதற்கான தகுந்த சாட்சிய சான்றாவணங்களை அரசுத்தரப்பில் சமர்ப்பிக்காததால் அரசுத்தரப்பு தனது தரப்பை நீதிமன்றத்திற்கு சமர்பிக்கவில்லை என்பதை கருத்தில் கொள்கிறது.

இந்நீதிமன்றம் மேற்சொன்ன கருத்தில் கொண்ட விஷயங்களை வைத்தும் சாட்சியம் சான்றாவண சான்று கூறுகளின் அடிப்படையிலும், இந்நீதிமன்றம் அரசுத்தரப்பில் தங்களது தரப்பை இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீதான இ.த.ச.1860 பிரிவு **279ன் கீழான குற்றச்சாட்டுகள் மெய்பிக்கவில்லை** என்றும் **பா.சா.அ. 2023 பிரிவு 2 மற்றும் பிரிவு 104ன்** படியும் தீர்வு காண்கிறது.

**8.வழக்கில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளின் மீதான ஆய்வு**

இந்த வழக்கில் அரசுத்தரப்பில் குற்றப்பத்திரிக்கையில் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிரான இ.த.ச.1860 பிரிவு **279ன்** கீழான குற்றச்சாட்டுகளின் சாரம்சத்தை பொறுத்து எவ்வித சாட்சியங்களும் அரசுத்தரப்பில் முன்னிலைப் படுத்தப்படவில்லை என்பதை கருத்தில் கொள்கிறது.

9. முடிவாக,

குற்றம் சுமத்தப்பட்ட நபரான **பால்தாசன் த/பெ. தனிஸ்லாஸ்** மீதான **இந்திய தண்டனை சட்டம் 1860 பிரிவு 279ன்** கீழான குற்றசாட்டுகள் அரசுத்தரப்பில் **நிரூபணம்**



SYEDMOHAMED AMEER DHEEN
Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.06 18:32:34 +0530

**செய்யப்படவில்லை** என்பதால் குற்றம் சுமத்தப்பட்ட நபரை **குற்றவாளி இல்லை** என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

*வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் குற்றம் சுமத்தப்பட்ட நபருடன் சமாதானமாகி பா.நா.சு.ச 2023 பிரிவு 359(8)ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அது சமரசம் செய்யக்கூடிய சட்டப்பிரிவுகளை பொறுத்து அனுமதிக்கப்பட்டதன் சூழ்நிலையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்* ***இதச 1860 பிரிவு 338(2எண்ணிக்கைகள்)ன் கீழான*** *குற்றச்சாட்டிலிருந்து இந்நீதிமன்றம் விடுதலை செய்கிறது.*

எனவே குற்றம் சுமத்தப்பட்ட நபரான **பால்தாசன் த/பெ. தனிஸ்லாஸ்** மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்தும், **பாரதிய நகரிக் சுரக்சா சங்கீதா 2023 பிரிவு 278(1)** ன் படி வழக்கிலிருந்தும் **விடுதலை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**10. பா.நா.சு.ச 2023 பிரிவு 498 ன் கீழ் உத்தரவு**

வழக்கில் தடயச்சொத்து எதுவும் கைப்பற்றப்படாததால் அது குறித்து உத்தரவு எதுவும் பா.நா.சு.ச 2023 பிரிவு 498 ன் கீழ் இல்லை.

**11. பா.நா.சு.ச 2023 பிரிவு 395, 396ன் கீழ் உத்தரவு**

வழக்கின் தன்மை சந்தர்ப்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு **பா.நா.சு.ச 2023 பிரிவு 395, 396** ன் கீழ் உத்தரவு ஏதும் இல்லை.

**12. பா.நா.சு.ச 2023 பிரிவு 481– ன் கீழ் உத்தரவு**

வழக்கில் பா.நா.சு.ச 2023 பிரிவு 481–ன் கீழ் பிணையப்பத்திரம் பெறப்பட்டுள்ளது. மேற்படி பிணையப்பத்திரமானது அப்பிணைப்பத்திரத்திரம் பெறப்பட்ட தேதியில் இருந்து 6 மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும். பின்னர் அப்பிணையப்பத்திரம் காலாவதியாகி விடும்.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று **06.04.2026** திறந்த இந்நீதிமன்றத்தில் தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.06 18:32:40 +0530

நீதித்துறை நடுவர்,
இரணியல்

## <u>பின் இணைப்பு</u>

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | சேகர் | நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | விஜயகுமார் | பாதிக்கப்பட்ட நபர் |
| அ.சா.3 | ராஜ்மோகன் | கூடுதல் சாட்சி |

**<u>அரசுத்தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 11.07.2022 | புகார்மனு |
| அ.சா.ஆ.2 | 17.03.2025 | சமாதான மனுவில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 11.07.2022 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 12.07.2022 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 12.07.2022 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 30.08.2022 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.7 | 13.07.2022 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.8 | -- | காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.9 | -- | காயச்சான்றிதழ் |

**அரசுத்தரப்பு சான்று பொருட்கள்** *:* *இல்லை*

***குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில், சாட்சி, ஆவணம்*** *: இல்லை.*

SYEDMOHAMED AMEER DHEEN

Digitally signed by SYEDMOHAMED AMEER DHEEN
Date: 2026.04.06 18:32:45 +0530

நீதித்துறை நடுவர்,
இரணியல்

**J**udicial **M**agistrate,
Eraniel

**Court Seal.**

“ The parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date’